இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 358 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 23 – சனிக்கிழமை 08 ஆகஸ்ட் 2026 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 358 : Thiruvalluvar Year - 2057 - Aadi 23 - Saturday 08 August 2026 - Dak 12 Pages ₹ 5.00

### தமிழ் இனம், மொழிக்காகத் தன் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்து – வரலாற்றில் நிலைத்த புகழைப் பெற்ற

# தமிழினத் தலைவர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் சென்னையில் அமைதிப் பேரணி – பல்லாயிரவர் பங்கேற்றனர்!

**சென்னை, ஆக. 8-**

**தமிழ் இனம், மொழிக்காகத் தன் வாழ்நாளையெல்லாம் அர்ப்பணித்த நவீன தமிழ் நாட்டின் சிற்பி - தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் நேற்று (ஆக.7)! இதனையொட்டி சென்னையில் நேற்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மாபெரும் அமைதிப் பேரணி நடைபெற்றது. இதில் கழகத்தினர் பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.**

**மேலும் தமிழ்நாடு முழுவதும் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைகளுக்கும், திருவுருவப் படங்களுக்கும் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**

தமிழ்நாட்டிற்காக, தமிழ் இனத்திற்காக, தமிழ்மொழிக்காக தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த பெருமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு செய்திட்ட திட்டங்கள் ஒன்றா, இரண்டா பட்டியலிட? அவர் தீட்டிய ஒவ்வொரு திட்டமும் தமிழ்நாட்டின் வளத்தை தமிழ் மக்களின் வாழ் வாதாரத்தை மேம்படுத்தவே என்றால் அது மிகையல்ல.

தமிழ்மொழிக்கு செம்மொழி அங்கீகாரம் கிடைக்கச் செய்து தமிழ்மொழிக்குப் பெருமைச் சேர்த்த திராவிட இயக்கப் பெருந்தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் (ஆக.7)!



தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி நேற்று (7.8.2026), கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் அமைதிப் பேரணியாகச் சென்று சென்னை மெரினாவில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வின்போது, கழக பொதுச் செயலாளர் துரைமுருகன், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா, கனிமொழி கருணாநிதி, மு.பெ.சாமிநாதன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், முன்னாள் அமைச்சர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் கழகத்தினர் என ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

**கலைஞர் நினைவிடத்தில் மலரஞ்சலி!**

தகைமைசால் தலைவராக, எழுத்தாளராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, திரைக்கதை வசனகர்த்தாவாக, இலக்கிய வாதியாக, திரைப்படத் தயாரிப்பாளராக, தலைசிறந்த நிர்வாகியாக, தமிழ்நாட்டின் ஐந்து முறை முதலமைச்சராக, உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவராக விளங்கியவரும், திராவிட இயக்கத்தின் போர்வாள்களில் ஒருவராகத் தமது பொதுவாழ்வைத் தொடங்கி, பின்னர், காஞ்சி தந்த காவியத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தில் தொடர்ந்து பணியாற்றி, அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக ஏறத்தாழ 50 ஆண்டுகள் பொறுப்பு வகித்து, அகில இந்திய அரசியலில் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து, தமிழ்நாட்டு வரலாற்றில் தமக்கென்று சில பக்கங்களை ஒதுக்கிக்கொண்ட முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாளினையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொண்ட "அமைதிப்பேரணி", நேற்று (ஆகஸ்ட்7, வெள்ளிக்கிழமை) காலை 8.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினை விடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கலைஞர் நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய பின்னர், கலைஞர் அவர்களின் கோபாலபுரம் இல்லம் சி.ஐ.டி.காலனி இல்லம் - அண்ணா அறிவாலயம் ஆகிய இடங்களில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படங்களுக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

அமைதிப்பேரணியில், முன்னாள் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, உள்ளிட்ட அனைத்து அணியினரும் பங்கேற்று, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்தினர்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்கள் தோறும் கழக முன்னோடிகள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்தும், நினைவுப் பேரணிகள்நடத்தியும்மரியாதைசெலுத்தினர்.

---

### பேப்பர் படித்தால் மட்டும் போதாது! விவசாயிகளின் கோரிக்கைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்!

# காவிரிப் பிரச்சினை: அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட என்ன பயம்?

## சட்டப்பேரவையில் – எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அடுக்கடுக்கான கேள்விகள்!

**சென்னை, ஆக.8-**

**சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாடு விவசாயிகளின் வேதனைகளுக்கு, இந்த அரசு சரியான தீர்வுகாண வேண்டும் என்று ஒத்திவைப்பு தீர்மானத்தை கொண்டுவந்து உரையாற்றுகையில், "பேப்பர் படித்தால் மட்டும் போதாது; விவசாயிகளின் கோரிக்கைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். காவிரிப் பிரச்சினைக்காக அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்ட என்ன பயம்" என்று அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினார்.**

சட்டப் பேரவையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழ்நாடு விவசாயிகளின் வேதனைகளுக்கு, இந்த அரசு சரியான தீர்வைக் காணவேண்டும் என்று ஒத்திவைப்புத் தீர்மானத்தை இங்கு கொடுத்துள்ளோம். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவதற்கு, நான்கு முக்கிய காரணங்கள் இருக்கின்றன.

**4 முக்கிய காரணங்கள்**

முதல் காரணம், மேகதாது அணை கட்டுகிற கர்நாடகா அரசைத் தடுக்க இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று, இந்த அவைக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

இரண்டாவது காரணம், முழு பயிர்க்கடன் தள்ளுபடி என்று நீங்கள் தேர்தலுக்கு முன்பு வாக்குறுதி கொடுத்துவிட்டு, இன்றைக்கு ஆட்சிக்கு வந்துவிட்டு, `அரைகுறை தள்ளுபடி' மட்டும் செய்வது ஏன்?

மூன்றாவது காரணம், காவிரியில் தண்ணீர் வராத காரணத்தால், குறுவை சாகுபடி



மொத்தமாக இல்லாமல் போய்விட்டது. இதற்குத் தகுந்த நிவாரணத் தொகையை, எப்போது இந்த அரசு விவசாயிகளுக்குக் கொடுக்க போகிறது.

நான்காவது காரணம், டெல்டா மாவட்டங்களை, வறட்சி பாதிக்கப்பட்ட மாவட்டங்களாக அறிவித்து, அங்கு இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு, உரிய நிவாரணத்தை, இந்த அரசு கொடுக்க வேண்டும்.

முதலில் மேகதாது பிரச்சினையில் இருந்து, எனது உரையைத் தொடங்குகிறேன். த.வெ.க. அரசு அமைந்ததில் இருந்து, மேகதாது அணை கட்டுவதில், இது வரை காட்டாத ஒரு வேகத்தையும் தீவிரத்தையும் இன்று கர்நாடகா அரசு காட்டி வருகிறது.

**தீர்மானம் மட்டும் போதாது!**

மேகதாது விஷயத்தில் ஒரு முறை மட்டும், பிரதமரிடம் நம் முதலமைச்சர் அவர்கள் கோரிக்கை வைத்தார். அடுத்த மேகதாதுப் பிரச்சினையில் இருந்து, இந்தப் பேரவையில் ஜூன் 19ஆம் தேதி அன்று, இந்த அரசு ஒரு தீர்மானத்தையும் கொண்டு வந்தது. ஆனால், அந்தத் தீர்மானம் மட்டும் நிறைவேற்றினால் போதாது, அனைத்துக் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து டெல்லிக்குச் செல்ல வேண்டும் என்று எங்களின் கழகத் தலைவர் சொன்ன ஆலோசனையையும் இந்த அவையில் பதிய வைத்துள்ளேன். அப்போது தான் இந்த விஷயத்தில் நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்கிறோம் என்பதையும் நாம் அவர்களுக்குச் சொல்ல முடியும்.

இந்த இடைபட்ட காலத்தில் நாங்கள் சொன்னதையும், இந்த அரசு செய்யவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக்

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்